விலை ரூபா 3/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 52 | ஆவணி - 2002 | பக்கங்கள் 12 | ஒளி 62

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின்

## உலர் உணவு விநியோக பொருட்களுக்கு

# சந்தை விலையில் விலை நிர்ணயம் செய்யவும்!

### யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அரச அதிபரிடம் கோரிக்கை

இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தில் ஈடுபட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவ் விநியோகத்தினால் மாதந்தோறும் நட்டமடைந்து வருவதினால் நிவாரண விநியோகத்திற்கென யாழ் செயலகம் தற்போது வழங்கிவரும் இலோவிற்கு 1.50 சத சேவைக்கட்டணத்தை மூன்று ரூபாவாக அதிகரித்து வழங்குமாறும்:

தற்போது செயலகத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களின் விலைகள் சந்தை விலையிலும் பார்க்க கூட வாக இருப்பதனால் அவற்றின் விலைகளை சந்தைவிலைக்கு நிர்ணயம் செய்யுமாறும்: யாழ். மாவட்ட கூட்டுறவு சபை யாழ் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றின் மூலம்கோரிக்கைவிடுத்துள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பாக யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு பெ. கனகசபாபதி யாழ் அரச அதிபர் திரு. க. சண்முகநாதனைச் சந்தித்து நேரில் கையளித்துள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்கள் வருமாறு:

நிவாரணப் பொருட்களின் விலை நிர்ணயமும் சேவைக் கட்டண அதிகரிப்பு கோரிக்கையும்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெற்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் பங்குபற்றிய கலந்துரையாடலில் மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயங்களையும், அது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் தங்களின் சாதகமான நடவடிக்கையின் பொருட்டு சமர்ப்பிக்கின்றோம். (12ம் பக்கம்பார்க்க)

* இம்மாதம் 23ம் திகதி முதல் 31ம் திகதி வரை

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு பணியாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம், கூட்டுறவுத் திணைக்களம் யாழ்ப்பாணம். கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு சபைகளுடன்இணைந்து நடாத்தும் பயிற்சிக் கருத்தரங்குகள் இம்மாதம் 23-ம் திகதி முதல் செப்ரெம்பர்மாதம் 11 ம் திகதிவரை நடாத்தவுள்ளது. இப்பயிற்சிக் கருத்தரங்கிற்கு வடக்குக்கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களமும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுசபைகளும் அனுசரணையாளர்களாகச் செயற்படவுள்ளனர்.

கூட்டுறவுத்துறையில் கடமையாற்றும் பல்வேறு பணியாளர்களும், கூட்டுறவாளர்களும் பயன்படத்தக்க வகையில் இக்கருத்தரங்கு ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டு நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இம் மாதம் 23ம் திகதி முதல் 31-ம் திகதி வரை நடைபெறவுள்ள (9ம் பக்கம் பார்க்க)

### உள்ளே....


- முகாமையில் முக்கிய நிகழ்வுக்கட்டங்கள்
- மரவள்ளியில் சித்திர வடிவ .....
- அனைத்துலக கூட்டுறவு தின .....
- பேன்கள்
- நிறுவன நோக்கினை அடைவதில் .....
- இலத்திரனியல் வர்த்தகம் .....
- உலகின் சமாதானக் காவலரன்களைப்


கூட்டுறவே நாட்டுயர்வு

# முகாமையில் முக்கிய நிகழ்வுக் கட்டங்கள் (BENCHMARKING)

எம்மைச் சுற்றி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. பொருளாதாரம், வர்த்தகம், கைத்தொழில், கல்வி என எல்லாத்துறைகளிலும் இம்மாற்றங்கள் இடம் பெற்றுக் கொண்டே இருக்கின்றன. பொருளாதாரத் துறையில் சிறந்த பொருளாதாரமானது, பல்வேறு மாற்றங்களை தோற்றுவித்து வருகின்றது மனிதத் தேவைகள், விருப்பங்கள் மாற்றமடைய அவர்களின் விருப்பங்கள் தேவைகளுக்கேற்ப உற்பத்தி முறையும், நிறுவனங்களின் அமைப்பும், கல்வி முறையும் மாற்றமடைய வேண்டியுள்ளது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சீன இலக்கியத்தில் யுத்தத் தந்திரங்கள் பற்றிய குறிப்பொன்றில் " நீ உன் தகைமையை அறிந்து கொள் அதுபோல் எதிரியின் தகைமையையும் அறிந்து கொள் அதனை நீ பின்பற்றாவிட்டால் பலநூறு யுத்தங்கள் புரிந்தாலும் நீ வெற்றியடைய மாட்டாய் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக பல தலைவர்களால் இவ்வுண்மை மதிக்கப்பட்டு வந்துள்ளது இது போன்றே முகாமையிலும் பிரச்சனைகளை அணுகுவதிலும், தீர்மானங்களை எடுப்பதிலும் இவ்வுண்மை பின்பற்றப்படுகிறது.

## இச்சொல் உருவான வரலாறு; (Its Origin and meaning)

இது புவிச் சரிதவியலயன்படி நிலத்தை அளக்கும் பொழுது பயன்படுத்தப்படுவதாகவும், அல்லது கடைகளில் துணி அளப்பதற்கு வசதியாக மேசையில் ஒரு யார் அல்லது மீற்றர் என்று குறித்து வைத்துத் துணிகளை அளக்கும் முறையாகவும் வழக்கத்துக்கு வந்தது அமெரிக்க உற்பத்தி மற்றும் தரச்சுற்று நிறுவனத்தின் விளக்கத்தின்படி முக்கிய நிகழ்வுக் கட்டங்கள் ( *Benchmarking* ) என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க குறிப்பிடக் கூடிய மாற்றம் அல்லது ஒருவரை விட இன்னொருவரில் காணப்படும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வித்தியாசம் அல்லது ஒரு உற்பத்திப் பொருளை ஏனைய உற்பத்திப் பொருளுடன் ஒப்பிடும் பொழுது காணப்படும் ஒரு வெளிப்படையான மாற்றம் எனக் கூறுகின்றது.

## முக்கிய நிகழ்வுக் கட்டங்கள் என்றால் என்ன ? (What is Benchmarking)

மனித வாழ்வில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. ஒரு குழந்தையை அவதானிக்கும் பொழுது அது பல நடவடிக்கைகளை, பழக்க வழக்கங்களை மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்கின்றது. அதனுடைய பழக்க வழக்கங்கள் செயல்கள் மாற்றமுறும் போது இச்சந்தர்ப்பங்களை பெற்றோரும், உறவினரும் ரசித்து மகிழ்வர் இம்மாற்றம் அக்குழந்தையின் வாழ்வில் நிகழும் முக்கிய மாற்ற நிகழ்வுகளாகும். அக்குழந்தை ஒருவரின் பேச்சு, நடத்தை என்பவற்றைப் பிரதி பண்ணும் போது அக்குழந்தையின் இயல்பான விருப்பம், ஊக்கம், இயல்பு, என்பன சேர்ந்து அதன் நடத்தைக்கு இன்னும் நளினமூட்டுகிறது. இவ்வாறே ஒரு சிறந்த பாடகரை பின்பற்றி அதுபாடும் பொழுது, அல்லது சிறந்த ஒரு கிரிக்கெட் ஆட்டக் காரனைப் போல்வர முயற்சிக்கும் பொழுது அக்குழந்தையின் இயல்பிலே ஏற்படும் மாற்றங்கள் ஒவ்வொன்றும் முக்கியக் கட்டங்கள் ( *Benchmarking* ) எனக் கூறமுடியும்.

சி. கோணேஸ்வரன்
முகாமை உசாத்துணை ஆலோசகர், இலங்கை கூட். முகாமை நிறுவனம் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.

இவ்வாறே நிறுவனங்களிலும் அமைப்புக்களிலும் ஏற்படுத்தப்படும் பொருத்தமான முன்னேற்ற நடவடிக்கைகள *Benhmarking* எனக் கூற முடியும்.

இவ்வாறே நிறுவனங்களிலும் அமைப்புக்களிலும் ஏற்படுத்தப்படும் பொருத்தமான முன்னேற்ற நடவடிக்கைகள் *Benchmarking* என அழைக்கப்படுகின்றன. உற்பத்தி, சேவை மற்றும் பல்வேறு நிறுவனங்களிலும் காணப்படும் உயர் பண்புகளை அவதானித்து அப்பண்புகளை தமது நிறுவனச் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றது. இதன் அடிப்படையில் தமது நிறுவனத்தில் எவ்வித கொள்கைகளைக் கடைப்பிடிக்கலாம், எத்தகைய மாற்றங்களை உட்புகுத்தலாம் என ஆராயப்படுகின்றது.

முகாமையின் முக்கிய நிகழ்வுக் கட்டங்கள் என்பது நிறுவனங்களின் உற்பத்தியிலோ, சேவையிலோ அல்லது சேவை நடைமுறைகளிலோ தொடர்ச்சியான முன்னேற்றத்தை எய்துவதற்கான ஒரு நடவடிக்கையாகும் இதன்படி பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- *Evaluation* - மதிப்பிடுதல்
- *Continuous* - தொடர்ந்த பங்களிப்பு
- *Best Practices* - சிறந்த செயல் முறைகள்
- *Systematic* - ஒழுங்கு முறை
- *Improvement* - விருத்தி

ஒரு வேலையை வெற்றிகரமாக நிகழ்த்த பின்வரும் சூத்திரத்தை பயன்படுத்தலாம்.

$$SR + P = CXE = S$$

SR என்பது *Self Respect* சுயமரியாதையை குறிக்கும். அதாவது நீர் உம்மைப் பற்றி என்ன கருதுகிறீர் உமக்கு இருக்கும் பெறுமதிகள் யாவை ? நீர் உமது நிறுவனத்தைப் பற்றி என்ன கருத்தை கொண்டிருக்கிறீர் ? நிறுவனத்தின் தூரப்பார்வை குறிக்கோள்கள் என்ன? என்பவற்றை இந்த SR என்பது குறிக்கும்.

P என்பது *Preparation* - தயார்படுத்தல், அதாவது உமதும் உமக்கு எதிரானவுள்ள சக்திகளினதும் பலம் என்ன, பலவீனம் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல், மேற்கூறிய SR உம் P உம் சேருமிடத்து C உருவாகிறது. அதாவது C - *Confidence* - மனோதைரியத்தை உருவாக்குகிறது ஆனால் இம்மனோ தைரியம் எக்காலத்திலும் நின்று பிடிப்பதில்லை. எனவே இந்த மனோ தைரியத்தை தொடர்வதற்கு E என்பது அவசியம் E - *Excitement* கடும் பிரதிபலிப்பு அவசியமாகும். இந்த கடும் பிரதிபலிப்புத்தான் ஒன்றை எதிர்த்து நிற்க வேண்டும் என்ற சக்தியை வழங்குகின்றது.

மேற்கூறியவாறு $SR + P = CXE$ என்பன நிகழும் பொழுது S - *Success* வெற்றி நிச்சயமாகிறது. முகாமையின் முக்கிய நிகழ்வு கட்டங்களின் போது மேற்காணும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்பதை இச்சூத்திரம் வலியுறுத்துகிறது

(11 ம் பக்கம் பார்க்க)

# மண்வளம்

## மரவள்ளியில் சித்திர வடிவ வைரசு நோய்

மரவள்ளியை இலகுவாக செய்கை பண்ணலாம். இதற்கு எப்போதும் நல்ல விலை கிடைக்கும் தரமான கிழங்குகளாக இருப்பின் ஏற்றுமதி கூட செய்யலாம். இலங்கையில் தற்போது 30 000 ஹெக்டயரில் மரவள்ளி செய்கை பண்ணப்படுகின்றது. இலங்கை ஒரு தீவாக இருப்பதனால் ஏனைய நாடுகளில் காணப்படும் பெரும்பாலான நோய்கள் மரவள்ளியில் இல்லை. ஆனால், அண்மையில் மரவள்ளியில் சித்திர வடிவ வைரசு நோய் வேகமாகப் பரவுவதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. இந்நோய் தற்போது மோசமான நிலைமை அடைந்து வருகின்றது.

இந்நோய் முதன் முதலாக 1980 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் காணப்படுவதாக அறியப்பட்டது. பொதுவாக இரு வகையான வைரசு நோய்கள் ஏனைய நாடுகளில் காணப்படுகின்றன. அவையாவன: ஆபிரிக்கா மரவள்ளி சித்திர வடிவ நோய் மற்றையது இந்திய சித்திர வடிவ நோய் என்பனவாகும். ஜெமினி வகுப்பைச் சேர்ந்த இரண்டு ஒத்த வைரசுக்களினாலேயே இந்நோய் ஏற்படுகின்றன.

### நோய் அறிகுறிகள் :

செய்கை பண்ணப்பட்டுள்ள மரவள்ளி வர்க்கத்திற்கேற்ப நோய் அறிகுறிகள் வேறுபடும். சில புகையிரத பாதையின் ஓரங்களில் காணப்படும் காட்டு மரவள்ளியிலும், கிரிந்திவெல பகுதியில் உள்ள மரவள்ளித் தோட்டங்களிலும் இந்நோயை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பின்வரும் அறிகுறிகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ நாம் காணலாம்.

- ❈ இளம் நிறமான சித்திர வடிவங்கள் இலையில் ஏற்படல்.
- ❈ கடும் நிறமான சித்திர வடிவங்கள் இலைகளில் ஏற்படல்.
- ❈ இலைகள் ஓரளவு விகாரமடைந்து காணப்படல்.
- ❈ இலைகள் பெரும்பாலும் விகாரமடைந்து காணப்படல்.
- ❈ நுனியில் சித்திர வடிவங்கள் காணப்படுவதோடு, சுருங்கி, விகாரமடைந்து காணப்படும்

பொதுவாக மரவள்ளிப் பயிர்களின் வளர்ச்சி குன்றி கட்டையாக மாறும். விளைச்சல் 20% - 90% வரை குறையும். நோயின் அறிகுறிகளை மரவள்ளிச் செடியின் எல்லா இடங்களிலுமோ அல்லது ஒருசில இடங்களிலுலோ காணலாம். சில வேளைகளில் நோயால் பாதிக்கப்பட்ட செடி எவ்விதமான நோய் அறிகுறிகளையும் வெளிக்காட்டாமல் காணப்படலாம்.

### நோய் பரவல் :

பொதுவாக இந்நோய் வெண் ஈயின் காரணமாகவே ஒரு செடியிலிருந்து இன்னொரு செடிக்குப் பரவுகின்றது. மரவள்ளித் தண்டுத் துண்டங்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நடுகைக்கென கொண்டு செல்லும் போது இந்நோய் வேறொரு பிரதேசத்திற்குப் பரவுகின்றது. வெண் ஈக்கள் எவ்வளவு வேகமாகப் பெருகுகின்றனவோ அதற்கேற்ப நோயும் பரவும். அதாவது காவிகளான வெண் ஈக்கள் விரைவாக பெருகும் போது நோயும் விரைவாகப் பெருகும் பொதுவான வரட்சியான காலங்களிலேயே இக்காலத்திலேயே நோயும் விரைவாகப் பரவும்.

இந்நோய் வைரசுவினால் ஏற்படுவதால் இதனைக் கட்டுப்படுத்த எவ்விதமான இரசாயனங்களும் இல்லை எனவே, பயிர்ச்செய்கை முறைகளினாலேயே இதைக்கட்டுப்படுத்த வேண்டும். மிகவும் பயன் தரக்கூடிய ஒரு முறை நோயால் பாதிக்கப்பட்ட மரவள்ளியைப் பிடுங்கி புதைத்து விடல் அல்லது எரித்து விடுவதாகும். இதைத் தவிர காவிகளான வெண் ஈக்களைக் கட்டுப்படுத்த மெற்றாசிஸ்ரொக்ஸ் அல்லது பிப்ரோனில் ஐ சிபாரிசு செய்யப்பட்டவாறு விசிறலாம். காவிகளை மாத்திரம் கட்டுப்படுத்துவதனால் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே ஆரம்பத்திலிருந்தே முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் சந்தேகத்திற்கிடமான மரவள்ளிப் பயிர்கள் காணப்படுமாயின் அதனைப் பிடுங்கி அழிப்பதே ஏற்ற வழி எப்போதும் நம்பிக்கையானவர்களிடம் அல்லது தோட்டத்தை அவதானித்து நோய் இல்லை என உறுதி செய்த பின்னரே தேவையான நடுகைத் துண்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

---

## சாதாரணதர பரீட்சை முடிவுகள்

கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம் வவுனியாவினால் 2002ம் ஆண்டு நடத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

ப. அற்புதமலர் (காரைநகர் ப. நெ. வ. அ. கூ. சங்கம்) இ. சற்சொருபினி (தனிப்பட்ட பரீட்சார்த்தி) சி. யோகேஸ்வரன் (புலோலி ப. நோ. கூ. சங்கம்) இ. வேல்குமார் (மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம்) ஆகியோர் இரண்டாம் பிரிவிலும், க. சிறிகாந் (அச்சுவேலி ப. நெ. வ. அ. கூ. சங்கம்) ஜெ. நொர்லின் (ஊர்காவற்றுறை ப. நெ. வ. அ. கூ. சங்கம்) சு. பிரதீபன் (வேலணை ப. நோ. கூ. சங்கம்) இ. பிரேமளா (தனிப்பட்ட பரீட்சார்த்தி) க. புவனேந்திரன் (புலோலி ப. நோ. சங்கம்) அ. மனோரஞ்சிதம் பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்) சி. ஜெயரதி (தனிப்பட்ட பரீட்சார்த்தி) பெ. ஆறுமுகநாதன் (பருத்தித்துறை ப. நெ. வ. அ. கூ. சங்கம்) க. சுவர்ணலதா (தனிப்பட்ட பரீட்சார்த்தி) தே. இராசசுலோசனா (வடமாகாண ப. நெ. வ. அ. கூ. சங்கசமாசம்) ஆகியோர் மூன்றாம் பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர்.

# கட்டைவேலி-நெல்லியடி பல நோ கூ. சங்க 80 - வது அனைத்துலகக் கூட்டுறவுத் தின விழா - யூலை 2002

கட்டைவேலி - நெல்லியடி பல நோ. கூ. சங்கம் 80 ஆவது அனைத்துலகக் கூட்டுறவுத் தின விழாவை முன்னிட்டு 06 07-2002 தொடக்கம் 04-07 2002 வரை உள்ள காலப்பகுதியை கூட்டுறவு வாரமாகக் கொண்டாடியது. இவ் வாரத்தில் கூட்டுறவுக் கொடியினை சகல கிளைகளிலும், சங்க வாகனங்களிலும் பறக்கவிடுதல், கூட்டுறவுக் கொடி, 'கூட்டுறவு நாட்டுயர்வு' என்று பொறிக்கப்பட்ட சால்வை விற்பனை செய்தல், சங்க கிளைகளில் இவ் வாரத்தில் கூடுதலான நுகர்ச்சிப் பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு 5வீதம் தள்ளுபடி வழங்கல், சங்க கிராமிய வங்கியில் வைப்பிலிடும் வைப்பாளர்களுக்கு ஒரு வருட முடிவில் 1வீத வட்டியினை கூடுதலாக வழங்கல், சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட புத்தக விற்பனை நிலையத்தில் புத்தகம் கொள்வனவு செய்வோர்க்கு 5 வீத தள்ளுபடி வழங்குதல், சைக்கிள் ஓட்டப் போட்டி, மாவீரர் துயிலும் இல்லத்தை துப்பரவு செய்யும்பணியை மேற்கொள்ளல் போன்ற நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி விழாவின் முதல் நாள் நிகழ்வு 23 - 07 - 2002ந் திகதி சனிக்கிழமை மு. பகல் 9 - 30 மணிக்கு யா/நெல்லியடி ம ம. வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது, தமிழ்த்தாய் வாழ்த்தை திருமதி த. விமலநாதன் ஆசிரியை இசைத்தார்.

திரு. ஆ. சுப்பிரமணியசர்மா கூ. அ. ஆணையாளர், திரு. பொ. சிவலிங்கம் கூ. அ. உ. ஆணையாளர் திரு. சி, வி. கே சிவஞானம்தலைவர், நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், திரு. சி. வீரசிங்கம் சமாதான நீதவான் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள் ஆசியுரை வழங்கிய பிரமுகர்கள் 'கூட்டுறவு நாட்டுயர்வு' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சால்வை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டவர். அதனை அடுத்து சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தகக் கண்காட்சியினை திரு க. குணராசா பிராந்திய ஆணையாளர் வடக்குக் கிழக்கு மாகாணம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

தலைமையுரையைத் தொடர்ந்து சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற அமைப்பாளர் திரு. இ இராகவன் அதிபர் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனை அடுத்து கருத்துரை வழங்கும் நிகழ்வில் விவேகானந்தரும் புலமையும் என்னும் பொருள் பற்றி டாக்டர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி யாழ் மருத்துவபீடம்) 'கல்வி, சமூகமும் கூட்டுறவும்' என்னும் விடயம் பற்றி திரு. செ சேதுராஜா (அதிபர் யா/நெல்லியடி ம ம. வித்தியாலயம்) 'சமூக மேம்பாட்டில் நூல்களின் பங்களிப்பு' என்னும் தலைப்புப் பற்றி திரு. செ. யோகநாதன் (எம். டி. குணசேனா) நூலசிரியர் ஆகியோரால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

வ. காந்திமதிநாதன்
கல்வி உத்தியோகத்தர்,
கட். நெல்லியடி பல நோ. கூ. சங்கம்:

புலமைப் பரிசு வழங்கலில் 2001ம் ஆண்டு க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய விசேட சித்தி பெற்ற 22 மாணவர்களுக்கும், 2001ம் ஆண்டு கல்வித் திணைக்கள கல்விசார் போட்டிகளில் மாகாண, மாவட்ட, தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற 18 மாணவர்களுக்கும் பரிசில்கள் யா/நெல்லியடி ம. ம. வித்தியாலய அதிபர் திரு செ. சேதுராஜா, நூலாசிரியர் திரு. செ யோகநாதன் (எம். டி. குணசேனா) ஆகியோரினால் வழங்கப்பட்டது.

ஆர்வமுள்ள சங்க நூல் நிலைய வாசகர்களான திரு. சி. செல்வரட்ணம் (அரச ஒய்வூதியர்) திரு. த. சுந்தரபாரதி (கிராம அலுவலர்) செல்வி. ஆ தெய்வமலர் (மாணவி) ஆகியோர் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கவியரங்கு நிகழ்வு திரு. மு: கந்தப்புமன்னவன் உப தலைவர், கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இந் நிகழ்வில் திரு. ச. ராகவன் (பட்டதாரி ஆசிரியர்) திரு. வ காந்திமதிநாதன் (பணியாளர்) திரு. ச. தணிகாசலபதி பணியாளர், திரு. வ ஜீவநாதன் (பனை அபிவிருத்திச்சபை) ஆகியோர் பங்குபற்றி சிறப்பித்தார்கள்.

திரு. இ. இராகவன் அவர்களின் நன்றியுரையுடன் முதல் நாள் நிகழ்வு 2-00 மணிக்கு இனிது நிறைவெய்தியது.

இரண்டாம் நாள் நிகழ்வு 14-07-2002ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மு பகல் 9 30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் தலைமையில் யா/நெல்லியடி ம. ம வித்தியாலயத்தில் ஆரம்பமாகியது கௌரவ கூட்டுறவு அமைச்சர் ஏ ஆர். எம். அப்துல் காதர் அவர்களுக்கும், அமைச்சரின் பாரியார், மகன், அமைச்சரின் செயலாளர், உதவியாளர்கள், அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் லைனல் சமரசிங்க, யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. ஓப கனகசபாபதி, பனை அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பொ. சிவபாதம் ஆகியோரும் கூட்டுறவு அதிகாரிகள், உத்தியோகத்தர்கள்பலரும் விழாவுக்கு வருகை தந்தனர்.

அமைச்சரும், அவரது பாரியாரும், மற்றும் பிரமுகர்களும் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். அமைச்சர் அவர்கள் மங்கள விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார். விழாவில் பங்கு கொண்ட பிரமுகர்கள் 'கூட்டுறவு நாட்டுயர்வு' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சால்வை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். அதன் பின்னர் செல்வி. த. சுஜாத்தா (நுண்கலைப்பட்டதாரி) அவர்களால் கூட்டுறவுக்கீதம் இசைக்கப்பட்டது பின்னர் தலைவர் தலைமையுரையில் கூட்டுறவுச் சங்கங்களின் பின்னடைவுபற்றியும், அதனை அபிவிருத்தி செய்யும் வழிகள் பற்றியும் விளக்கிக் கூறினார். கூட்டுறவு அமைச்சர் பேசுகையில் முன்னர் ஒரு காலத்தில் யாழ்ப்பாண பகுதியில் தான் கூட்டுறவு நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் இருந்து வந்தது. எனவும் தற்போது நலிவடைந்த நிலையில் உள்ள கூட்டுறவு இயக்கத்தை மேலும் கட்டியெழுப்ப ஆவன செய்து தருவேன் என்று உறுதி அளித்தார். அமைச்சரினால் கணனி இயந்திரம் ஒன்று சங்கத்திற்கு அன்

(12ம் பக்கம் பார்க்க)

# சுகவளம்

# பேன்கள்

பேன்கள் பொதுவாக ஆரோக்கியம் குன்றிய இடங்களில் நெருக்கமாக வாழ்கின்ற மனிதரில் புற ஒட்டுண்ணிகளாய் வாழ்கின்றன. அவை மனிதருக்கு பெரும் துன்பம் விளைவிப்பதோடு நோய்க்கிருமிகளையும் காவக்கூடும். போர்க்காலச்சூழலில் பேன்களின் பரவுகை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. பேன்கள் அதிகளவு குருதியை உறிஞ்சிக் குடிப்பதாலும், பேன் கடியினாலும், கழிவுப் பொருட்களால் ஏற்படும் ஒவ்வாமை போன்ற விபரீத விளைவுகளாலும் நோய்களைப்பரப்புவதாலும் இக்கால கட்டத்தில் மனிதருக்கு பலவித இன்னல்களை உண்டு பண்ணுகின்றன.

பேன்கள் மூன்று வகைப்படும் அவையாவன :

- ❈ தலைப்பேன் ( *Pediculus huma - nus Capitis*
- ❈ உடற்பேன் அல்லதுசீலைப்பேன் ( *Pediculus humanus* ) *Corporis*
- ❈ நண்டுப்பேன் ( *Pthirus Pubis*.

வெப்பநாடுகளில் அதிக ஆடைகள் அணிகின்ற மக்களின் உடலிலேயே தான் உடற்பேன் காணப்படும். குறைவான ஆடைகள் அணிபவரின் உடலிற் காணப்படுதலரிது.மூவகைப் பேன்களிலும் காலின் முடிவில் உட்புறமாக முள் போன்ற உறுப்பொன்றும் வெளிப்புறமாக கொக்கி போன்ற நகமும் உண்டு. அவற்றின் உதவியால் மயிரையும் துணிகளையும் இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்கின்றன. தலைப்பேன் தலைமயிரில் வாழ்ந்து தலையையும் மண்டைத் தோலையும் பாதிக்கின்றன. உடற்பேன் மனிதரின் உடம்பையும் நண்டுப்பேன் அக்குள் பகுதியையும் தாக்குகின்றன. சில வேளைகளில் கட்புருவத்திலும் கண்ணிமை மயிர்களிலும், கமக்கட்டுப் பகுதிகளிலும், மீசை, தாடியிலும் நண்டுப்பேன் தொற்று காணப்படுகின்றன.

தலைப்பேனும் உடற்பேனும் ஆதிகால மனிதரின் உரோமம் நிறைந்த உடம்பில் வாழ்ந்த ஒருவகைப்பேனின் வழித் தோன்றல்களேயாகும். உடம்பில் உரோமம் குறைந்து போய் உரோமமற்ற நிலை வந்தபோது பேன்களின் இருப்பிட வசதி குறைந்து போனதாய் சில பேன்கள் தலையில் உள்ள மயிர்களில் மட்டும் வாழத் தொடங்கின. மற்றும் பேன்கள் சில உடம்பு தோலைத் தழுவியிருக்கும் ஆடைகளில் வாழத்தொடங்கின.

தலைப்பேனும் உடற்பேனும் உருவிலும் அளவிலும் ஒத்தவை 1 மதல் 3 மி.மீ வரை வேறுபட்ட நீளங்களிற் காணப்படுபவை. நண்டுப்பேன்கள் இன்னும் மிகச்சிறியவை அவற்றின் உடல் சதுரவடிவானது. பார்வைக்கு நண்டு போலக்காட்சி கொடுப்பதால் அவற்றை நண்டுப்பேன் என அழைத்தனர். அவை ஒரே இடத்தில் நீண்டகாலம் அசைவற்றிருக்கும். அவை மனித உடம்பில் மட்டுப்படுத்தப்பட்ட சுரசுரப்பான மயிர்கள் இருக்கும் அக்குள் பகுதியிலும் குதத்தை சுற்றியுள்ள பகுதியிலும் வாழ்கின்றன. பேன்களின் வாய்ப்பகுதியில் சில உறிஞ்சும் குழலாகவும் மற்றும் சில தோலைத்துளைக்கும் உறுப்பாகவும் பயன்படுகின்றன. பேன்கள் நரைநிறமான, செட்டைகளற்ற பூச்சியிலும் அவற்றிற்கு மூன்று சோடிக் கால்கள் உண்டு.

வாழ்க்கைச் சக்கரம் :

பேன்களின் ஆண்பெண் புணர்ச்சியின் பின்னர் பெண்பேன் இடும் முட்டைகள் ஈர் எனப்படும். மயிரிலோ அல்லது ஆடைகளிலோ ஈர்கள் இறுக்கமாக ஒட்டப்பட்டிருக்கும். முட்டைகள் பொரித்த பின் மூன்று நிலைகளில் குஞ்சுப்பேன் குறையுரு மாற்றம். அடைந்து வளர்ந்து நிறையுடலியாக மாறும். பேனுள்ளவர்களுடனான நெருங்கிய உடம்புத் தொடுகை மூலமும், அவர்கள் உபயோகித்த துணிகள், படுக்கை கூந்தல் தூரிகை முதலியவற்றை பிறர் உபயோகிப்பதன் மூலமும் பேன்கள் பரவுகின்றன. நண்டுப்பேன்கள் மனிதரின் நெருங்கிய தனிப்பட்ட தொடுகைகள் அல்லது பாலியல் உறவுகள் மூலம் பரவுகின்றன. நண்டுப்பேன்க உள்ளவர்கள் உபயோகித்ததுணி, துவாய், படுக்கை மலகூட இருக்கைகள் மூலமும் பரவலாம். பேன் தோலைத்துளைத்த பின் குருதியைக் குடிக்கின்றது. பேன் கடிப்பதால் நமைவு உண்டாக கடித்த இடத்தில் சொறிய வேண்டி உள்ளது. சொறிதலால் புண்கள் உண்டாகி அவற்றில் நோய்க் கிருமிகள் தொற்றுகின்றன. தலைப் பேன் தொற்று பெருமளவில் இருந்து அவை கடிப்பதால் சொறிவதன் மூலம் மண்டைத்தோலழற்சி உண்டாகும். பேன்கடி மூலம் தோலில் புகுத்தப்பட்ட உமிழ் நீராலும், கழிக்கப்பட்ட மலத்தினாலும் ஒவ்வாமை உண்டாகலாம். சில வேளையில் நீலநிறம் புள்ளிகள், பேன் தொற்றியுள்ள பகுதியில் காணப்படும்.

இது தவிர பேனால் காணப்படும் ஒரு வகை வைரசுக் கிருமிகளும் (*Typhus*) ஒருவகை மீளும் காய்ச்சல் கிருமிகளும் ( *Relapsing Fever* ) பேனால் பரவக்கூடும். நண்டுப்பேன்கள் நோய்க்காவிகளாவதில்லை

றிக்கற்சியா

தைபசு நோயை உண்டுபண்ணுவது றிக்கற்சியாகிருமிகள் (*Ricketsia*) நோய்த்தொற்றுள்ளவரின் குருதியை பேன் அருந்தும் போது அதன் உணவுக் கால்வாய்கள் கிருமிகள் பிரவேசிக்கின்றன. அங்கு அதன் மேலணிக் கலன்களுள் புகுந்து இனம் பெருகி 4 நாள்களில் கலங்கள் உடைவதால் கிருமிகள் மலம் மூலம் கழிக்கப்படுகின்றன. பேனின் மலக்கழிவிலுள்ள கிருமிகள் தோல் காயங்கள் ஊடாகத் தொற்றுகின்றன. பேனை நகங்களுக்கிடையில் வைத்து நெரிக்கும் பொழுதும் தொற்றலாம்.

சுருளுருக்கள்

மீளுங்காய்ச்சலை உண்டு பண்ணும் சுருளுருக்கள் ( *Spirochetes - Bovrelia recurrentis*) பொறிலியாக் கிருமிகள் எனப்படும் மீளுங்காய்ச்சலுள்ள ஒருவரின் குருதியைப் பேன் உறிஞ்சுகையில் கிருமிகள் அதன் இரப்பையை அடைகின்றன. தொற்றுள்ள பேன் நசுக்கப்பட்டதும் அவற்றில் இருந்து வெளியாகும் உடல், நீர் தோற்காயத்தின் ஊடாகத்தொற்றை ஏற்படுத்தும். (*Trench Fever*) என்னும் நோயை முதலாம் உலகப் போர்க் காலத்தில் பேன்கள் இந்நோய்க் காரணியான றிக்கற்சியாவை பரப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(10ம் பக்கம் பார்க்க)

# நிறுவன நோக்கினை அடைவதில் மனித வளத்தை கையாள்வது தொடர்பில் முகாமையாளர்களின்பங்கு

J. P. கோல்டன்
3ம் வருடம் முகாமைத்துவம்
யாழ். பல்கலைக்கழகம்.

அறிமுகம் :

நாம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பு படுகின்றோம். அந்நிறுவனங்கள் ஏதோ ஒரு நோக்கத்தினைக் கொண்டுள்ளன. வரையறைக்கு உட்பட்ட வளங்களைக் கொண்டு உத்தமவிளைவுகளை அடைவதே நோக்கமாகக் காணப்படுகின்றன மனிதவள முகாமை நோக்கில் விளைத்திறன் ( *Efficiency* ) சமத்துவம் ( *Epuity* ) என்பன நோக்கங்களாகக் காணப்படலாம். ஒரு நிறுவனம் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்க வேண்டுமாயின் அது தனது நோக்கத்தினை சரியாக வரையறுத்துக்கொள்ள வேண்டும் இந்நோக்கங்களை அடைந்து கொள்ளல் என்பது நிறுவனத்தை சரியான முறையில் முகாமை செய்வதில் தங்கியுள்ளது. முகாமை என்பதற்கு பலரும் பல்வேறுவரைவிலக்கணம்கூறியுள்ளபோதிலும் *Koontz & O Donnell* ஆகியோர் 1976 இல் கூறியுள்ள வரைவிலக்கணம் நடைமுறையில் அதிக பொருந்தப்பாடுடையது. முகாமை என்பது திட்டமிடல் ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், வழிநடத்தலும் தலைமைதாங்கலும், கட்டுப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய செய்முறை ஆகும் இதுவே இவர்களது கருத்தாகும். இந்த முக்கிய பணிகளைப் பொறுப்பேற்று செய்பவர்கள் முகாமையாளர்கள் ஆவர்.

## 2. முகாமையாளர்கள்;

நிறுவன இல்க்குகளைநிர்ணயித்து நிறுவனத்தை வழிநடத்திச் செல்பவர்கள் முகாமையாளர்கள். இவர்கள் பொதுமுகாமையாளர்கள் நடுத்தர மட்ட முகாமையாளர்கள், கீழ்மட்ட முகாமையாளர்கள் என தனதுசேவையினை நிறுவனத்திற்கு வழங்குவர்.

### 2 1 பொது முகாமையாளர்கள்;

நிறுவன இலக்கை அடைவதில் பொது முகாமையாளர்களின் பங்கு முக்கியமானது. இவர்கள் நிறுவன கட்டமைப்பில் உயர் மட்டத்தில் அங்கம் வகித்து இயக்குநர் சபையுடன் இணைந்து கொள்கைகள், நோக்கங்களை வகுத்தாலும் கீழ்மட்டத்திலுள்ளவர்களுக்கும் இயக்குநர் சபைக்கும் இடையில் ஓர் இணைப்பாளராகச் செயற்படுகின்றனர். அதாவது நடுத்தரமட்ட முகாமையாளர்களின் அதிகாரங்கள் பொறுப்புக்களை வரையறுத்து ஒழுக்களாகச் செயலில் ஈடுபட வைக்கின்றனர். அத்துடன் குழுக்களுக்கிடையில் போட்டியை ஏற்படுத்கூடிய வகையில் இவர்கள் செயற்பட வேண்டும்.

### 2.2 நடுத்தரமட்டமுகாமையாளர்கள் :

இங்கு ஒவ்வொரு பகுதியினது முகாமையாளர்களும் உதவிமுகாமையாளர்களும் காணப்படுவர். அதாவது நிதி, சந்தைப்படுத்தல், உற்பத்தி ஆகிய பகுதிகளின் தலைவர்களும் அவற்றின் உதவிமுகாமையாளர்களும் காணப்படுவர். இவர்கள் தமது குறுங்கால இலக்குகளை அடைவதன் மூலம் நிறுவனத்தின் உயர்மட்ட முகாமையால் உருவாக்கப்படும் கொள்கைகள் நோக்கங்களை அடைவதற்கு உதவுவர்.

### 2.3 கீழ்மட்டமுகாமையாளர்கள்:

இதில் மேற்பார்வையாளர்கள், பிரதம இலிகிதர், *Foreman* ஆகியோர் அங்கம் வகிப்பர். இவர்கள்,

- ❈ நாளாந்த வேலைகளை திட்டமிடல்.
- ❈ தொழிலாளர்களை தேவைக் கேற்ப ஆலோசனை ஆதரவு என்பவற்றைவழங்கி வழிநடத்துதல்.
- ❈ மேல் முகாமைக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- ❈ ஊழியர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோதாமாகவேலை செய்யத் தூண்டுதல்.

ஆகிய கருமங்களில் ஈடுபடுவர்.

## 3. முகாமையாளர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் :

நிறுவனம் வினைத்திறனாக இயங்குவதற்கு முகாமையாளர்களின் பண்புகளும் திறமைகளும் பங்காற்றும் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள முகாமையாளர்களுக்கும் வெவ்வேறுபட்ட கடமைகள் ஒப்படைக்கப்படுகின்றன. எனவே அவர்கள் அவற்றைச் சிறப்பாக செய்வதற்கு தொழில் நுட்ப அறிவு மனிதநேயம், இரசிக்கும் தன்மை ஆகிய திறமைகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒரு சிறந்த முகாமையாளருக்கு இருக்க வேண்டிய முக்கியமான தனிப்பட்ட பண்புகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. சிறந்த தீர்மானங்களை எடுக்கக் கூடியவராக இருத்தல்.
2. சுயமாக கருமங்களை ஆரம்பிக்க கூடியவராக இருத்தல்.
3. பொறுப்பு உள்ளவராகஇருத்தல்.
4. தெளிவான சிந்தனை உடையவராகவும், பரந்த அறிவு உள்ளவராகவும் இருத்தல்.
5. புதிய காரியங்களைச் செய்யுந் துணிவுள்ளவராகவும், உறுதியானவராகவும் இருத்தல்.
6. சுறுசுறுப்பானவராகவும் விவேகமானவராகவும் இருக்கவேண்டும், மேலும் விழிப்பான அவதானம், அனுபவம், புதிய எண்ணங்களை உருவாக்கல், கற்பனாசக்தி, உள்ளுணர்வு ஆகிய பண்புகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்,

## 4. முகாமையாளர்களின் கடமைகள் :

நிறுவனத்திற்கு நிறுவனம் வெவ்வேறுபட்ட பிரச்சனைகள் காணப்பட்ட போதிலும் எல்லா நிறுவனங்களும் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சனைகள் காணப்படுகின்றன. அப்பிரச்சனைகளில் தொழிலாளர்களினதும் தொழிற்சங்கங்களினதும் கோரிக்கை ஒன்றாகும் ஒரு பிரச்சனையை வெற்றிகரமாக கையாள்வதற்கு அப்பிரச்சனையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். எனவே முகாமையாளர்கள் இவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட முன் ஊழியர் என்ன கோரிக்கையை முன்வைக்க இருக்கிறார்கள், அது நிறைவு செய்யப்படாவிடின் எந்த→

## நிறுவன நோக்கினை

(6ம் பக்கத்தொடர்ச்சி)

கைய எதிர் விளைவுகளை ஏற்படுத்துவார்கள் என்பதை முறையாராரீதியில் அறிதல் வேண்டும். 1961 - 1980 காலப்பகுதியில் *Thomas Feter Robert Waterman* ஆகியோர் அமெரிக்க கம்பனியில் சிலவற்றை ஆராய்ந்ததில் அவை சிறந்த தொழிற்சாலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலமும் ஊழியர்களின் சமூக தேவைகளைச் சிறந்த முறையில் திருப்தி செய்வதன் மூலமும் வெற்றிகரமாக இயங்கியமை கண்டறியப்பட்டது. எனவே சிறந்த தொழிற்சாலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதும் அவர்களின் சமூக உளவியல் தேவைகளைத் திருப்தி செய்தலும் முகாமையாளர் கடமையாகும். மேலும் ஊழியரின் முயற்சி நிறுவன வெற்றிக்கு அவசியம் என்பதை ஊழியர் மத்தியில் ஏற்படுத்துவதோடு ஊழியர்கள் நிறுவனத்தின் மூல விழுமியங்களுக்கு மதிப்புக் கொடுக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

### 5. திட்டமிடலில் முகாமையாளரின் பங்கு :

திட்டமிடல் என்பது இடைவெளியை நிரப்புவதற்கான ஒரு செய்முறை ஆகும். அதாவது நோக்கத்தினை அடையும் பொருட்டு தற்போதுள்ள வளங்களின் குறிப்பாக மனித வளத்தின் நிலை என்ன என்பதை ஆராய்ந்து அடைய விரும்பும் நோக்கத்தினை எய்துவதற்கான நிலைமை என்ன என்பதை ஆராய்ந்து அவை இரண்டிற்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது இச் செய்முறை ஆகும். திட்டமிடலில் வரையறைகள் காணப்பட்ட போதிலும் நிறுவனத்தை எதிர்காலத்தில் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல திட்டமிடல் முக்கிய பங்காற்றுகின்றது. எனவே முகாமையாளர்கள் வியாபார வாய்ப்புக்களையும், பிரச்சனைகளையும் அடையாளம் கண்டு தொடர்புடைய தகவல்களை சேகரித்து பகுப்பாய்வு செய்து மாற்று வழிகளை பட்டியலிட்டு அவற்றை மதிப்பீடு செய்து சிறந்த மாற்று வழியினைத் தெரிவு செய்ய வேண்டும்.

### 6. ஊழியரிடலில் முகாமையாளரின் பங்கு:

நிறுவனத்தின் நோக்கமானது ஊழியர்களை சிறந்த முறையில் வழிநடத்தி அடையப்பட வேண்டும் என்பதனால் நிறுவனத்திற்கு ஊழியர்களைச் சேர்க்கும் போது முகாமையாளர்கள் மிகவும் கவனமாக செயற்படல் வேண்டும். மனிதவள முகாமை நேக்கின் விளைத்திறன் ஒரு நோக்கமாக அமைவதால் ஊழியரிடும் போது அது நெகிழ்வுத்தன்மையினைக் கடைப்பிடிக்கின்றது. நெகிழ்வுதன்மையானது இரு வழிகளில் கடைப் பிடிக்கப்படலாம்;

1. செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மை :

   இங்கு வேலைகளுக்கிடையில் மாற்றி பயன்படுத்தக்கூடிய தனிநபர்களைக் கொண்ட வேலைக் குழுக்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

2. நேர நெகிழ்வுத்தன்மை :

   இங்கு ஊழியர்கள் வேலை ஆயுட் காலம் முழுவதற்குமாக அன்றி வேலை ஒப்பந்தங்களுக்காக அல்லது குறிப்பிட்ட வேலை மணித்தியாலங்களுக்காக வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள்,

ஊழியரிடும் போது :

- ❖ எத்தகைய ஆற்றல் அனுபவங்கள். திறமைகளைக் கொண்ட ஊழியர்களை சேர்க்க வேண்டும்.
- ❖ நபர்களது அறிவு, ஆளுமை, விழுமியங்கள் மனப்பாங்குகள்
- ❖ எப்போது, எப்படி நபர்களை உள்ளெடுக்க வேண்டும்.
- ❖ பொருத்தமான நபரை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும்.

  ஆகிய அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஊழியர்கள் பல கருமங்களுக்கு மாற்றி பயன்படுத்த வேண்டி இருப்பதனால் அவர்கள் பல கருமங்களையும் ஆற்றக் கூடியவர்களாகவோ அவற்றை எளிதில் கற்கக்கூடியவர்களாகவோ இருக்க வேண்டும். எனவே அவர்களின் திறமையை அறிவதற்கு நுண்ணறிவுச் சோதனை நடாத்தல் கல்வித் தகைமைச் சான்றிதழ், நற்சான்றிதழ் என்பவற்றைச் சமர்ப்பிக்குமாறு பணிக்கலாம். இவற்றில் தகைமை உடையவர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தலாம். இதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நிறுவனத் தேவைக்கேற்ப வேலைக்கு அமர்த்தலாம்.

### 7. ஒழுங்கமைத்தலில் முகாமையாளரின் பங்கு:

ஒழுங்கமைத்தல் என்பது நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்குத் தேவையான செயற்பாடுகளை நிர்ணயித்து வரையறுத்துக் கொள்வதன் ஊடாக நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ளும் ஒரு படிமுறை ஆகும். ஒழுங்கமைப்பு படிமுறையில் திணைக்கள மயமாக்கல், கையளிப்பு, பரவலாக்கல் ஆகிய அம்சங்கள் காணப்படுகின்றன. திணைக்கள மயமாக்கல் / அடிப்படைகளில் மேற்கொள்ளப்படினும் தொழிற்பாட்டு அடிப்படையில் திணைக்கள மயமாக்கல் மேற்கொள்ளப்படுமாயின் இங்கு தொடர்புடைய கருமங்கள் தொகுதியாக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஒப்படைக்கப்படுகின்றன. பொறுப்புக்களை ஒப்படைத்தால் மாத்திரம் போதாது. அவற்றைத் திறமையாக நிறைவேற்றப் போதுமான அதிகாரங்களைக் கையளிக்க வேண்டும். அத்துடன் தொடர்புகளையும் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

### 8. கட்டுப்படுத்தலில் முகாமையாளரின் பங்கு;

முகாமையாளர்கள் நிறுவன முன்னேற்றக் கருதி பல திட்டங்களை வகுத்தாலும் அவை நடைமுறையில் அடையப்பட வேண்டும். எனவே உண்மையான செயற்பாட்டினை அறிந்து அளவிடவேண்டிய தேவை உள்ளது இங்கு பின்னூட்டியின் பங்கு அவசியமானது முகாமையாளரின் உருவாக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறையில் அடையப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த அவை உண்மைச் செயற்பாட்டுடன் ஒப்பிடப்படுகின்றன. இவ்வாறு ஒப்பிடப்படும்போது இரண்டிற்குமிடையில் வேறுபாடு அதாவது விலகல் காணப்படுமாயின் அவற்றை நிவர்த்தி செய்ய முகாமையாளர்கள் நடவடிக்கை எடுப்பர். எனவே முகாமையாளர்கள் கட்டுப்படுத்தல் நுட்பங்களை அறிந்திருப்பது அவசியமாகின்றது. தனிநபர்களுக்கான நியமங்கள் தீர்மானிக்கப்படும் போது அவர்களையும் பங்கு பற்ற வைப்பதன் மூலம் விலகலினைக் குறைந்தளவில் பேண முடியும். (8ம் பக்கம் பார்க்க)

# இலத்திரனியல் வர்த்தகம் - Electronic Commerce

(முற்றொடர்)

**சமூகத்துக்கான நன்மைகள் :**

☆ இலத்திரனியல் வர்த்தகமானது பல தனிப்பட்டவர்களை வீட்டில் இருந்தபடியே வேலை செய்ய வசதியளிப்பதினால் மிகக் குறைவான பயணங்களுக்கு அனுமதிக்கின்றது. இதனால் வீதிகளில் வாகன நெருசல் குறைவாக காணப்படுவதுடன் காற்று மாசடைவதும் மிகக் குறைவாக காணப்படும்.

☆ இலத்திரனியல் வர்த்தகமானது சில வியாபாரிகளுக்கு தமது பொருட்களினை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு அனுமதி அளிப்பதால் குறைவான பணவலுவுடைய மக்கள் கூடுதலாக இப் பொருட்களை வாங்கி தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்;

☆ இலத்திரனியல் வர்த்தகமானது மூன்றாம் உலக நாடுகளிலும் கிராமப்பகுதிகளிலும் இருக்கும் மக்கள் பொருட்கள் சேவைகளினை அனுபவிப்பதற்கு வசதியளிக்கின்றது. உயர் தகைமை பற்றி கற்பதற்கும், கல்லூரிப்பட்டங்களினையும்பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்களினை இலத்திரனியல் வர்த்தகம் வழங்குகின்றது.

☆ இலத்திரனியல் வர்த்தகமானது பொதுச் சேவைகள் வழங்கலுக்கான வசதியினை கொடுக்கின்றது. இது செலவினை குறைத்து தரத்தினை அதிகரிக்கும்.

**இலத்திரனியல் வர்த்தகத்தின் வகைகள் ;**

இலத்திரனியல் வர்த்தகத்தில் பல சாத்தியமான பிரயோகங்கள் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கிடையேயும் வியாபாரிகளுக்கிடையேயும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இலத்திரனியல் வர்த்தகப் பிரயோகங்களின் தனிப்பட்ட பொதுவானவகைகளாக மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. அவை நிறுவனங்களுக்கிடையேயானவை இதனை நிறுவனத்திற்கு நிறுவனம் எனவும் நிறுவனத்துக்குள்ளேயானவை, நிறுவனத்திலிருந்து நுகர்வோருக்குரியவை என வரையறுக்கலாம்,

**நிறுவனங்களுக்கிடையிலான இலத்திரனியல் வர்த்தகம் ;**

இந்தப் பார்வையில் இலத்திரனியல் வர்த்தகமானது பின்வரும் வியாபார பிரயோகங்களுக்கு வசதியளிக்கின்றது.

**வழங்குனர் முகாமைத்துவம்:**

இலத்திரனியல் பிரயோகமானது கம்பனிக்கு வழங்குனர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் கொள்வனவு கட்டளைகள் நிரப்படுத்தல் செலவு சுழற்சி நேரங்கள் போன்றவற்றினைக் குறைப்பதற்கும் வசதியளிக்கின்றது.

**இருப்பு முகாமைத்துவம்;**

இலத்திரனியல் பிரயோகமானது கட்டளை சுழற்சியினைச் சுருக்குகின்றது ஒரு நிறுவனத்தின் பங்காளர் பலர் இலத்திரனியல் மூலமாக இணைந்திருப்பதால் தொலைநகல் அல்லது அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட தகவலானது உடனடியாக மாற்றீடு செய்யப்படுகின்றது. இது இருப்பு மட்டங்களை குறைப்பதற்கும் இருப்பு சுழற்சியினை முன்னேற்றுவதற்கும் இருப்பின்மையினை நீக்குவதற்கும் உதவுகின்றது.

**முடிவுரை ;**

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வர்த்தகம் பெற்றுக்கொண்ட நன்மைகள் அளப்பரியனவாகும் இலத்திரனியல் வர்த்தகமானது 21ம் நூற்றாண்டில் நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகளை விரைவாகவும் அதிகமாகவும் வளர்க்க உதவும் என்பதில் சந்தேகமில்லை நவீன அடிப்படையிலான வர்த்தகம் சர்வதேச வர்த்தகத்தில் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தி வருவதனால் உலக மக்கள் இலத்திரனியல் வர்த்தகத்தின் மீது அதிக நாட்டத்தை செலுத்துவதாக கூற முடியும்.

---

# நிறுவன நோக்கினை

7ம் பக்கத் தொடர்ச்சி

**9. தகவலின் பங்கு**

நிறுவனத்தை வெற்றிகரமாகவழிநடத்துவதற்கு மனிதவளம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோன்று தகவலும் முக்கியமானது தகவல், திட்டமிடலுக்கும் கட்டுப்படுத்தலுக்கும் இன்றியமையாதது. அது மாத்திரமின்றி உயர்மட்டங்களில் என்ன தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன, அவற்றை அமுல்படுத்துவதில் கீழ் மட்ட ஊழியரிடம் என்ன எதிர்பார்க்கப்படுகின்றன. கீழ்மட்டத்தில என்னநடைபெறுகின்றதுஎன்பவற்றை அறிய தகவல் முக்கியமானது.

**10. முடிவுரை**

முகாமையாளர்கள் நியமங்களை தெளிவாக வரையறுத்து அவற்றினை ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களை இலக்குநோக்கிவழிநடத்த வேண்டும். இவ்வாறு வழிநடத்தும் போதுநிறுவனங்களில் ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமான முறையில் கையாண்டு சிறந்த உறவுகளைப் பேணுவது முகாமையாளர்களின் பொறுப்பாகும், மேலும் நிறுவனத்தில் திறமையான ஊழியர்களை வேலைக்கு அமர்த்தினால் மட்டும் போதாது அவர்களின் செயற்திறனை அதிகரிக்க அவர்களை சிறந்த முறையில் ஊக்கப்படுத்த வேண்டும். எனவே முகாமையாளர்கள் ஊழியர்களை கௌரவத்துடனும் அக்கறையுடனும் வழிநடத்துவதோடு ஊழியர்களில் அக்கறை உடையவர்களாகவும். அவர்களுக்கு ஆதரவு வழங்குபவர்களாகவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு ஊழியர்களை வழிநடத்தும் போது ஊழியரின் திருப்தி அதிகரித்து அதன் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தினை அடையமுடியும், குறிப்பாக மனிதவள முகாமைத்துவ நோக்கங்களாக வினைத்திறன், சமத்துவம் ஆகிய இரண்டினையும் சமநிலையில் பேண முடியும்.

# கூட்டுறவு தான் நாட்டுயர்வு

கட்டைவேலி நெல்லியடி பலநோ. கூ. சங்கத்தினால் நடத்தப்பட்ட 80 ஆவது அனைத்துலகக் கூட்டுறவு தின விழாவில் இடம் பெற்ற கவியரங்கில் இடம் பெற்றகவிதை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

கூட்டுறவு மட்டும் நாட்டுயர்வு தந்திடுமா ?
கூட்டுறவு தானே நாட்டுயர்வு தந்திடுமே
கூட்டுறவு நன்மைகளைக் கூறிவிட இங்கே
கூடுதே கூடுதே வார்த்தைக் கோலம்.

கூட்டுறவு தானே நாட்டுயர்வு - இதைக்
கூசாது நாங்கள் சொல்லிடுவோம்.
நாட்டுயர்வே நம் உயர்வு - இதை
நானிலத்திற்கு நாங்கள் செரல்லிடுவோம்.

கூட்டுறவு தந்திடும் நாட்டுயர்வு
அதுவரை எமக்கேது கண் அயர்வு - நாம்
இருகரங்கள், இருகரங்கள் சேர்ப்போம் - புது
வரங்கள், நல்வரங்கள் பெறுவோம்.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
கூட்டுறவால் கோடி நன்மை
நாடி வருகுது புதுப்புது புதுமை
நமக்கினி கூடிடும் வாழ்வில் இனிமை

கொண்ட கொள்கை ஏழு வெற்றிபெற
கூட்டுறவு வாழ்க வாழ்க
மக்கள் தேவை உணர்ந்து
மாபெரும் சேவை செய்யும்
கூட்டுறவே நீ வாழ்க கூட்டுறவே நீ வாழ்க
கூட்டுறவால் இன்பமே சூழ்க சூழ்க.

**வ. காந்திமதிநாதன்**
கல்வி உத்தியோகத்தர்,
கட்டைவேலி நெல்லியடி பலநோ. கூ. சங்கம்

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்...**
(1ம் பக்கம் பார்க்க)

இப்பயிற்சிக் கருத்தரங்கினை இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர் சி. கோணேஸ்வரன் வடிவமைத்துள்ளார்.

இப்பயிற்சிக்கருத்தரங்கின் போது கூட்டுறவு மற்றும் முகாமை சார்ந்த வெளியீடுகளையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கு இம் மாதம் (ஆகஸ்ட்மாதம்) 23ம், 24ம், 25ம் திகதிகளில் பொது, மற்றும் நடுத்தர முகாமையாளர்கள், செயலாளர்கள் மட்டத்தில் உள்ளவர்களுக்கும்.

26ம், 27ம் திகதிகளில் கணக்குப் பதிவாளர், எழுதுவினைஞர், கணக்கு விகிதர் தரங்களில் கடமை புரியும் நடுத்தரப்பணியாளர்களுக்கும்;

28ம், 29ம் திகதிகளில் கொள்வனவு உத்தியோகத்தர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், கிளை முகாமையாளர்களுக்கும்;

30ம் திகதி கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும்;

31ம் திகதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் பாரிய, நடுத்தர கூட்டுறவுச் சங்கங்களின் கௌரவ தலைவர்கள், மற்றும் நெறியாளர்களுக்கும் நடைபெறவுள்ளது

# உலகின் கடல் வளங்கள்

உலகில் கிடைக்கப்பெறுகின்ற சகல வளங்களிலும் ஆயிரம் மடங்கு ஆற்றல் பெற்றது கடல் வளமாகும்.

உலகில் உள்ள அனைத்துக் கடல்களிலும் 35 கோடி வகையான கடற்பிராணிகள் வாழுகின்றன. இந்து மகா சமுத்திரத்தில் மட்டும் 25 லட்சம் தொன் மீன்கள் ஆண்டு தோறும் பிடிக்கப்படுகின்றன. இத்தொகையை மேலும் பத்து மடங்கு அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி முடிவின் படி அரபிக்கடலில் மட்டும் ஒன்றரைக்கோடி தொன் மீன்கள் பிடிக்கலாமென அமெரிக்க தேசிய விஞ்ஞானக் கழக ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

உலகில் உள்ள பெருங்கடல்களில் 65 லட்சம் தொன் தங்கம் தண்ணீரில் கலந்திருப்பதாகவும்; கோடிக்கணக்கான தொன் மெங்கனீஸியம், பொஸ்போட் போன்ற உலோகங்கள் கடல்படுக்கைகளில் ஆங்காங்கே சிதறிக்கிடப்பதாகவும் கடல்வள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய கடல் வளத்தின் முழு அளவையும், நாம் பயன்படுத்தாது இருக்கின்றோம். ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்டுள்ள கடல்வளம் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகள் பல்வேறு நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

பேசுகின்றவன் விதைக்கிறான்
கேட்கிறவன் அறுவடை செய்கிறான்.

- அமெரிக்க பழமொழி

# உலகின் சமாதானக் காவலர்களைப் பற்றி தெரிந்துகொள்ளுங்கள்

## சேர் நோர்மன் ஏஞ்சல்

சேர் நோர்மன் ஏஞ்சல் என்பவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர் இவர் 1910ல் 'மாபெரும் பொய்யான கனவு' என்னும் நூலை எழுதி வெளியிட்டார்.

இவர் தனது இளமைக் காலத்தை இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் கழித்து விட்டு தனது 23 ஆவது வயதில் அமெரிக்கப் பாற்பண்ணை ஒன்றில் வேலை செய்து வந்தார். அவ்வேலையில் இருக்கும் போதே பத்திரிகை நிருபராகவும் வேலை செய்தார்

1904ல் இவர் 'லண்டன் டெயிலி மெயிலில்' வேலைக்கு சேர்ந்து அதன் ஐரோப்பிய பதிப்பின் ஆசிரியராகப் பணியாற்றினார்,

" யுத்தத்தின் மூலம் எந்த நாடும் வெற்றி பெற்றதில்லை " என்ற கருத்தை மையமாக வைத்து இவரால் எழுதப்பட்ட " மாபெரும் பொய்யான கனவு" என்னும் நூல் ஒரு வருடத்தில் 25 மொழிகளில் வெளியாகியது ஆங்கிலத்தில் மட்டும் 25 லட்சம் பிரதிகள் விற்பனையானது. இதன் விளைவாக 'நோர்மன் ஏஞ்சல் அமைப்புக்கள்' உருவாகியதுடன் இவர் சேர் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1914ம் ஆண்டு உலக மகா யுத்தத் ஏற்பட்ட போது தீவிர சமாதானப் பிரசாரத்திலும், முயற்சியிலும் ஈடுபட்டார்.

உலக மகா யுத்தத்தின் தாக்கத்தை வைத்துக்கொண்டு தனது மாபெரும் பொய்யான கனவு என்னும் நூலை விரிவுபடுத்தி எழுதி அதனை 933ல் மறுபதிப்புச் செய்தார். அத்துடன் 1934ல் உலக சமாதானத்திற்கான நோபல் பரிசையும் பெற்றுக் கொண்டார்.

தனது 72 வது வயது வரை எழுதிக் கொண்டே இருந்த சேர் நோர்மன் ஏஞ்சல் 1942ம் ஆண்டு உலகுக்கு அற்புதமான கருத்தொன்றை கூறியிருந்தார்.

'மனிதன் தனது அறிவைச் சரியான பாதையில் செலுத்தினால் மூன்றாவது உலக மகா யுத்தத்தைத் தடுத்திருக்கலாம்" என்பதே அக்கருத்தாகும்.

---

**பேன்கள்**

(5ம் பக்கத் தொடர்ச்சி)

**சிகிச்சை முறை**

தலைப்பேனை ஒழிப்பதற்கு இலங்கையில் காமாபென்சின்கெக்ஸாகுளோரைட் " ( Gammabeuzene h.xachlo ride ) என்ற மருந்து பெரும்பாலும் உபயோகிக்கப்படுகிறது இது Letion ஆகமருந்துக்கடைகளில் கிடைக்கிறது. இதனை இரவில் உங்கள் குழந்தைக்கு எண்ணை பூசுவது போல தலைமுடி முழுவதும் பூசுங்கள். காலையில் ஷாம்பு வைத்துத் தலையைக் கழுவுங்கள். மாறக மருந்தைக் காலையில் தலைக்கு வைத்து 3 மணித்தியாலம் சென்ற பின்பும் கழுவலாம். இவ்வாறு ஒரு முறை மட்டும் வைத்தால் போதாது. முட்டைகள் பொரிக்க 4 தொடக்கம் 5 நாட்கள் வரை செல்லலாம் எனக் கூறினோம். பொரிக்கும் குஞ்சுகள் வளர்ந்து முட்டையிடுவதைத் தடுப்பதற்காக வாரத்திற்கு இருமுறையாக நான்கு தடவைகள் இம் மருந்தைத் தலைக்கு இட்டு முழுக வேண்டும்,

இன்னுமொரு முக்கியமான விடயம் என்னவெனில் ஒரு குடும்பத்தில் உள்ள பேன் உள்ள அனைவருமே அவ்வாறு மருத்துவம் செய்ய வேண்டும். இல்லையேல் ஒருவரிலிருந்து மற்றவர்களுக்கு இலகுவில் தொற்றி அழிப்பதைக் கடினமாக்கி விடும்

அத்துடன் பேன் உள்ளவரின் உடற்சுதந்திரத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். பேன்கள் பெருகி வாழ்வதற்கு ஓரளவு சமமான உஷ்ணமும், மனிதர்களோடு நெருங்கிய தொடர்பும் அடிக்கடி இரத்தம் உறிஞ்சும் வாய்ப்பும் தேவை. அடிக்கடி தலையை ஷாம்பு அல்லது சோப் வைத்துக் கழுவுபவர்களில் அவை வாழ்வது சிரமம் எனவே உங்கள் மகளுக்கு குறைந்தது வாரம் இரண்டுமுறையாவது தலையில்முழுக வாருங்கள். அத்துடன் அவனின ஆடைகளையும் துவாய், தலையணை உறை படுக்கை விரிப்பு ஆகியவற்றையும் சுடுதண்ணீரில் கழுவி இஸ்திரிக்கை போடுங்கள்.

**உடற் பேன் ;**

சிலருக்கு உடலிலும் ஒரு வகைப் பேன் இருக்கிறது. உருவத்தைப் பொறுத்த வரை உடற்பேனுக்கும், தலைப்பேனுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் காணமுடியாது. உடற் பேனை சீலைப்பேன் என்றும் அழைப்பார்கள். அவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் அவை வாழும் இடங்கள் தான். தலைப்பேன் தலையில் வாழ்ந்து தலைமுடியிலே முட்டை இடும் பெருகும். ஆனால் சீலைப் பேன் உடைகளில் வசிக்கிறது. இரத்தம் உட்கொள்ள மட்டுமே உடலுக்குச் செல்லும் முட்டைகளைக் கூட துணிகளில் தான் இடும். சீலைப் பேனை ஒழிப்பதற்கு உடலுக்கு மருந்து பூசினால் போதாது. துணி வகைகள் யாவற்றையும் சுடுதண்ணீரில் அவித்துத் துவைத்தால் மட்டுமே ஒழிக்கலாம்

## முகாமையில்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### முக்கிய நிகழ்வுக் கட்டங்களின் நன்மைகள் : (Benifits of Benchmarking)

- இது நிறுவனங்களில் ஏற்படுக் மாற்றங்கள், விருத்திகள், இக்கட்டான நிலை என்பவற்றை அறிவதற்கு உதவுகின்றது.
- நிறுவனங்களில் நடைமுறையில் என்ன மாற்றங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும் மாற்றங்களைப் புரிவதற்கான ஊக்குவித்தல் வழிமுறைகள் யாவை என்பவற்றை விளக்குகிறது.
- ஒரு குறித்த நிறுவனத்தை வேறு நிறுவனங்களுடன் ஒப்பிட்டு நடைமுறையில்என்னபுதியமாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை அறிவுறுத்தி அடுத்து வரும் நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை உணர்த்துகின்றது

### முக்கிய நிகழ்வுக் கட்டங்களின் வகைகள் (Types of benchmarking)

ஒரு நிறுவனத்தை ஒப்பீடு செய்வதற்கு இம்முறைஉதவுமென உணர்ந்தால் இதனை மூன்று வகையில் இனங்காணலாம்.

1. முக்கிய நிகழ்வுக் கட்டங்களின் முன்னேற்றம் (*Performance Benchmarking*)

(உ+ம்) ஒரு பாடசாலையில் மாணவர்களை அனுமதிக்கும் நடைமுறை இன்னொரு பாடசாலையின் மாணவ அனுமதி முறையில் இருந்து எவ்வளவு வேறுபடுகிறது அது எவ்வளவு தூரம் பெற்றோரின் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை அவதானித்து அறிந்து கொள்ளலாம்

2. நடைமுறைப்படுத்தல் முக்கிய நிகழ்வு கட்டங்கள் (*Process Benchmarking*)

(உ+ம்) வேலையாளர்களைத் தெரிவு செய்யும் போது தமது நிறுவனத்திலும் பார்க்க வேறு நிறுவன முறைகளில் பின்பற்றப்படும் சிறந்த முறையொன்றை பயன்படுத்தல்.

3. உபாய முறை முக்கிய நிகழ்வுக் கட்டங்கள்(*Strategic Benchmarking*

உ+ம் ஒரு பாடசாலை தனித்துவமாக செயற்படும் பாது அரச உதவி முற்றாக நிறுத்தப்பட்டால் எதிர்காலத்தில் என்ன வளங்களை நம்பி இருப்பது என்ற தீர்மானங்கள் எடுக்கப்படும் போது ஒரு வேறுபட்ட சூழல் அங்கு நிலவத் தொடங்கும். அப்பாடசாலையைப் பொறுத்து இதனை ஒரு முக்கிய நிகழ்வுக் கட்டமாக கொள்ளலாம். இந்த உபாய முறைக் கட்டங்கள் நீண்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

### இம் முக்கிய நிகழ்வுக் கட்டங்களை 4 வகையில் நோக்கலாம்

1 உள்ளக முக்கிய நிகழ்வுக் கட்டம் (*Internal Benchmarking*)

உ+ம் ஒரு இளையில் இளவரவு அதிகமாகவுள்ளது மறு இளையில் இளவரவு குறைவாக இருக்க என்ன காரணம்.

2 போட்டி முறை முக்கிய நிகழ்வுக் கட்டம் (*Competitive Benchmarking*)

உ+ம் ஒரு நிறுவனத்தின் வருடாந்த இலாப் பெறுபேறுகள் அதே போன்ற இன்னொரு நிறுவனத்தின் பெறுபேறுகளில் இருந்து எவ்வாறு விலகி நிற்கிறது.

3, வேகல நடைமுறைகளை அவதானிக்கும் முக்கிய நிகழ்வுக் கட்டம் (*Functional Benchmarking*)

உ+ம் ஒரு பாடசாலையின் புத்தக நிலையத்தை ஒரு பல்கலைக்கழக புத்தக நிலைய நடைமுறைகளுடன் ஒப்பிட்டு பொருத்தமான முறையொன்றைத் தேர்தல்.

4. மரபு ரீதியிலான முக்கிய நிகழ்வுக் கட்டம (*Generic Benchmarking*)

உ+ம் ஒரு நிறுவனத்தின் பிரிவு நடவடிக்கைகளின் மரபு ரீதியான வளர்ச்சியை அனுபவத்தை ஏனைய நிறுவனங்களுக்குள் புகுத்தல்.

### முக்கிய நிகழ்வுக்கட்டங்களை பின்பற்றும் முறைகள் ( The process of Benchmarking)

நடைமுறை முக்கிய நிகழ்வுகளின் கட்டம் 5 அடிப்படைகளைக் கொண்டது. அவற்றை பின்வருமாறு விளக்கலாம்.

i ) திட்டமிடுதல் - *Planing*

ஒரு நிறுவனமானால் தரக் கூட்டங்களைக் (*Qvality Cycle*) கூட்டுவதற்கு எத்தனை குழுக்கள் பிரிக்கப்பட வேண்டும். அவர்கள் என்ன விடயங்களை விவாதிக்கலாம், பலாபலன்கள் எவ்வாறு இருக்கும். என்பவற்றை இக்குழு திட்டமிடுதல் வேண்டும்.

ii ). ஆய்வு நடத்தல் - *Searching*

மேற்படி திட்டக் குழு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் சென்று குறித்த விடயங்கள் தொடர்பில் என்ன வேறுபாடுகள், முன்னேற்றங்கள் காணப்படுகின்றன என்பதை அவதானிக்கும்.

iii ஒப்பீட்டாய்வு - *Analysing*

தங்களது நிறுவனத்திலும் ஏனைய நிறுவனத்திலும் அவதானிக்கப்பட்டவற்றை ஒப்பீடு செய்து பகுத்தாய்தல் வேண்டும்.

iv) நடைமுறைப்படுத்தல்-*Adapting*

பகுத்தாய்வின் படி எடுக்கப்பட்ட முடிவுகளை தமது சொந்த நிறுவனத்துக்கு பொருத்தமானமுறையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்

### பின்வருவன முக்கிய நிகழ்வுக் கட்டத்தில் அடங்காது (What Benchmarking is not)

* ஏனைய நிறுவனங்கள் செய்வதை முறையாக ஆய்வு எதையும் மேற்கொள்ளாமல் தாமும் பின்பற்றுதல்
* புத்தகங்களில் அல்லது அறிக்கையில் உள்ளவற்றை அப்படியே பின்பற்றுதல் .
* ஒரு நிறுவனத்தின் முழு விபரங்களையும் ஒரே நேரத்திலும் அமுல் படுத்த முயற்சிப்பது.
* ஒரு உத்தியைமட்டும் சகல ரோக நிவாரணியாகக் கருதி சகல பிரச்சினைகளுக்கும் பயன்படுத்துவது.

### முக்கிய நிகழ்வுக் கட்டம் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியன, Some Critical Issues in Benchmarking)

இது வெறுமனே ஒரு நவீன உத்தி மட்டுமல்ல இது நடைமுறை அனுபவங்களைக் கொண்டு செயற்படுத்தப்படுவதாகும். இதனை மொத்தத் தரக் கட்டுப்பாட்டு முகாமையில் பயன்படுத்தப்படும் உத்திகளுள் ஒன்றாக கருதலாம் அதாவது மொத்த தரக் கட்டுப்பாட்டில் (*T Q.M*) பயன்படுத்தப்படும் தரச்சுற்று, மீள்பொறி முறைப்படுத்தல், ஜப்பானிய 5 எஸ் முறைகளை போன்றே இதுவும் ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்படுகின்றது

Registered as a News paper at the G. P. O
SriLanka Under / No K. V. J. 59 / 87



# பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்ற விண்ணப்பிக்கவும்

இலங்கைக் கூட்டுறவு முகாமை நிறுவனத்தினால் இம் மாதம் 23-ந் திகதி முதல் 31ம் திகதி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்படவுள்ள பயிற்சிக்கருத்தரங்கில் பங்கு பற்றக்கூடிய பணியாளர்களைத் தெரிவு செய்து யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பி வைக்குமாறு இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம் சகல கூட்டுறவுச் சங்க, சமாசத் தலைவர்களுக்கும் பொது முகாமையாளர்களுக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் பணியாளர் ஒருவருக்கு 250 ரூபா வீதம் கட்ட வேண்டிய முழுத்தொகையையும் யாழ் மாவட்ட கூட்டுறவு சபைக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

## கட்டைவேலி - நெல்லியடி...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

பளிப்பாக வழங்கப்பட்டது அதனை அடுத்து அமைச்சின் செயலாளர், தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

பின்னர் தொடர்ந்து திரு. சே. சதானந்தன் அதிபர் அவர்களின் வரவேற்புரையுடன் விழா நடைபெற்றது.

'படைப்பும் பிரதிபலிப்பும்' என்ற தலைப்பில் குப்பிளான் ஐ. சண்முகம் ஆசிரியர் அவர்களும், கூட்டுறவும் மகளிரும் என்ற தலைப்பில் திருமதி. வ. பத்தினிப்பிள்ளை மகளிர் குழுத் தலைவி அவர்களும் கருத்துரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் மூத்த கூட்டுறவாளர்கள், ஓய்வு பெற்ற பணியாளர்கள், சேவைமூப்பில் உள்ள பணியாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டதுடன் அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டது.

ஊக்குவிப்பு நிகழ்வில் சங்க பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு பணமாகவும் அன்பளிப்பாகவும் வழங்கப்பட்டது. சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது சங்கப் பாலர் பாடசாலைகளின் கலைநிகழ்ச்சிகள், இராஜகிராமக் குழுவினரின் தெருக்கூத்து நிகழ்வு என்பன இடம்பெற்றன சங்க கல்வி உத்தியோகத்தர் திரு. வ. காந்திமதிநாதன் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவெய்தியது.

## உலர் உணவு விநியோக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1. சேவைக் கட்டணத்தை அதிகரித்து தரக் கோருதல்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணம் பொட்களின் விநியோகத்திற்கு செயலக களஞ்சியத்தில் இருந்து பொருட்களை சங்கக் களஞ்சியத்திற்கு கொண்டுவருதல், பின்னர் கிளைநிலையங்களுக்கு பங்கீடு செய்து மீண்டும் விநியோகத்தின் பொருட்டு கிளை நிலையங்களுக்கு ஏற்றிப்பறித்தல், சனத்தொகை குறைந்த தொலைவில் உள்ள கிளைநிலையங்களாயினும் மக்களது நன்மை கருதி அவ்வக் கிளைகளுக்கு பொருட்களை அனுப்பி வைத்தல் போன்ற போக்குவரத்து செலவினங்களின் அதிகரிப்பும்.

மொத்த, கிளைநிலையங்களில் விநியோகிக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் மனித சக்தி செலவின அதிகரிப்பும், தொடர்புபட்ட கணக்கு வைத்தல், ஏனையவற்றிற்கான காகிதாதி செலவினங்கள் என்பவற்றை கணக்கிடும் போது சங்கங்களின் இச் சேவைகளுக்கு செயலகத்தால் வழங்கப்படும் சேவைக்கட்டணம் (கிலோவிற்கு 1. 50) தற்போதய எரிபொருள் விலை அதிகரிப்பு, சம்பள அதிகரிப்பு காரணமாக குறித்த செலவினங்களை சங்கங்களால் ஈடு செய்ய முடியாமல் உள்ளநிலைகளைசுட்டிக்காட்டி சங்கங்களுக்கான சேவைக் கட்டணத்தை அதிகரித்து தர தங்களைக் கோர வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

2. சேவைக்கட்டணத்தை பணமாக வழங்க கோருதல்

செயலகத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களுக்கான விலைகள் தற்போதய சந்தைவிலைகளுடன் ஒப்பிடும்போது அதிகரித்து காணப்படும் நிலை பற்றி கலந்துரையாடப்பட்டது. விலை விபரங்கள் பின்வருமாறு.

மேற்படி பொருட்களின் விலை அதிகரித்து காணப்படுகின்றமையால் சேவைக் கட்டணத்திற்கான பொருட்களின் விலையை குறைத்தே விற்பனை செய்யும் நிலை சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது இதன் காரணமாக ஏற்கனவே செலவினங்களை ஈடு செய்ய முடியாத நிலையில் ரூபா 1.50 கூட சேவைக்கட்டணமாக கிடைக்காத நிலையில் சங்கம் மேலதிக நட்டத்தையும் அடையவேண்டிய நிலை ஏற்படுகின்றமையால் குறித்த சேவைக் கட்டணத்தை பொருளாக அன்றி பணமாகத் தந்துதவுமாறு தங்களைக் கோரவேண்டும்

3. நிவாரணப் பொருட்களின் விலை நிர்ணயம்

விடயம் (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு நிவாரணப் பொருட்களின் விலை சந்தை விலையை விட அதிகரித்து காணப்படுவதால் நிவாரணப் பொருட்களின் விலையை சந்தை விலைக்கு ஏற்ப குறைத்து நிர்ணயம் செய்வதன் மூலம் நிவாரணம் பெறும் மக்கள் நன்மை அடைவார்கள் என்பதோடு அது நியாயமானதாகவும் அமையும்என்பதை கருத்தில் கொண்டு நிவாரணப் பொருட்களின் விலையை சந்தை விலைக்கு ஏற்ப நிர்ணயம் செய்து தருமாறு தங்களைக் கோர வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

எனவே மேற்படி மூன்று விடயங்களையும் கருத்தில் கொண்டு தாங்கள் பொருத்தமான நடவடிக்கை எடுத்து சங்கங்களின் தொடர்ந்த செயல்பாட்டிற்கு தங்களது முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவீர்கள் என்ற பூரண நம்பிக்கையுடன் இவ்விடயங்களைத்தங்களிற்குச்சமர்ப்பிக்கின்றோம்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா. கூ. சபையினரால் 2002ம் ஆண்டு ஆவணி மாதம் வெளியிடப்பட்டது.